தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர்கள் தொடக்கப் பள்ளிகளை, ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளுவதற்கு 1971, ஜனவரி-பிப்ரவரி அளவில் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்களா ?

(இ) ஆமெனில். அதற்கான காரணங்கள் யாவை? அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

Director of Public Libraries

* 24. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to **state :**

(*a*) whether the Government have any proposal to appoint a separate Director of Public Libraries in the State; and

(*b*) if so, the details thereof?

பொது நூலக இயக்குநர்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) மாநிலத்தில் உள்ள பொது நூலகங்களுக்காகத் தனியாக இயக்குநர் ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948, பிரிவு 4-ன்படி தற்பொழுது பள்ளிக் கல்வி இயக்குநரே அலுவலால் தமிழகப் பொது நூலக இயக்குநராகப் பணிபுரிகிறார். அண்மையில் நடந்த நூலக ஆணைக்குழுத் தலைவர்கள், செயலர்கள் மற்றும் மாவட்ட மத்திய நூலகர்கள் மாநாட்டில் நூலகத்துறைக்குத் தனி இயக்குநரை நியமனம் செய்வது குறித்து பரிந்துரை செய்யப்பட்டு இது அரசினரின் பரிசீலனையில் உள்ளது.

Pharmacists' Association

*25 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether the Government have received any representation from the Tamil Nadu Government Pharmacists' Association about the 28th January, 1971 ; and

(*b*) if so, the details thereof?

@ Printed as Appendix I on page 148

25th January 1972]

மருந்து கலப்பவர்கள் சங்கம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 ஜனவரி 28-ஆம் நாள் வாக்கில் தமிழ்நாடு அரசு மருந்துகலப்பவர்கள் சங்கத்திடமிருந்து சார்புரை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) மக்கள் நல்வாழ்வு (மற்றும்) குடும்பநலத் திட்ட இயக்குநருக்கு 17-2-71 அன்று ஒரு மனு கிடைக்கப்பெற்றது. மருந்து கலப்பாளர்களிடமிருந்து கிடைத்தது.

(இ) அம்மனுவில் கண்ட கோரிக்கைகள் வருமாறு :—

(1) சம்பள விகிதத்தை உயர்த்தல்.

(2) பதவி உயர்வுக்கான வாய்ப்புகள்.

(3) குடியிருப்பு வசதிகள் அமைத்தல்.

(4) வாராந்திர விடுப்பு கொடுப்பதற்கு விடுப்பு ஒதுக்கு இடங்கள் ஏற்படுத்தல்.

(5) எழுத்துப்பணி படியினை உயர்த்துதல்.

(6) சங்கக் கட்டிடம் கட்டுவதற்கு சென்னையில் ஒரு இடம் ஒதுக்குதல்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே தமிழ்நாடு அரசிலே ஊழியம் செய்கிற மருந்து கலப்பவர்கள் வாராந்திர விடுமுறை வேண்டும் என்ற கோரிக்கையை பல ஆண்டுகளாகவே கூறிக்கொண்டு வருகிறார்கள். இதை அரசு கவனித்து இதில் பெரிய செலவு இல்லாத காரணத்தால், அதை அவர்களுக்கு அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, வாராந்திர விடுமுறை அளிப்பது என்பது சில மருத்துவ மனைகளில்தான் இயலக்கூடியதாகும். வேறு பல இடங்களில் விடுமுறை அவர்கள் பெறுவதற்கு ஏதுவாக "Creation of leave reserve posts of Pharmacists so that they could be given weekly holidays" என்ற முறையில் 10 நியமனம் செய்வதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: மருந்து கலக்கிற தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எல்லா மருந்தகங்களிலும் இருக்கிறார்கள். பத்து இடங்கள் என்றால், எந்த இடம்? மாநிலம் பூராவும் இருக்கிறார்கள். வாரத்திற்கு ஞாயிற்றுக்கிழமை கூட விடுமுறை இல்லை என்ற நிலைமை இருப்பதால், அந்தப் பத்து இடங்கள் யாவை என்று அறிய விரும்புகிறேன்.

[25th January 1972

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : டீச்சிங் ஹாஸ்பிட்டலாக இருக்கிற மருத்துவ மனைகளில் தான் தொடர்ந்து ஏழு நாட்களும் வேலையிருக்கும். வேறு சில மருத்துவ மனைகளில் ஏழு நாட்களும் வேலை இருப்பதில்லை.

Greater Madras

* 26. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether the Government have submitted any **plan for** greater Madras to the Union Planning Commission ; and

(*b*) if so, details thereof?

சென்னைப் பெருநகர்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னைப் பெருநகருக்கான திட்டம் எதையாவது அரசு மத்திய திட்டக் குழுவுக்குப் பணிந்தனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :(அ) & (இ) சென்னைப் பெரு நகர்ப் பகுதியின் வளர்ச்சிக்கான சென்னைப் பெருநகர்த் திட்டம் "1971-1991" 20 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றக்கூடியபடி ஒன்று 1971, ஜூன்திங்களில் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக, இருபதாண்டு நீண்டகால முதலீடாக ரூபாய் 938 கோடியும், அடுத்த ஐந்தாண்டுக் காலத்தின் குறுகிய கால முதலீடாக ரூபாய் 185 கோடியும் தேவைப்படுகிறது. வேலை வாய்ப்பு, வீட்டுவசதி, குடிதண்ணீர் வழங்கல், போக்குவரத்துத் தேவைகள், கல்வி சுகாதாரம் பொழுதுபோக்கு வசதிகள் உள்ளிட்ட சமுதாய நலன்கள் போன்ற துறைகளில் சென்னை பெருநகர்ப் பகுதிக்கு குறுகிய கால, நீண்ட காலத்தேவைகளை இத்திட்டம் மதிப்பிட்டதுடன், படிப்படியாக இத்தேவைகளை நிறைவு செய் வதற்கான வழிகளைக் குறித்தும் கருத்துத் தெரிவித்திருக்கிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்திய அரசிட மிருந்தும் உலக வங்கி போன்ற அனைத்து நாடுகள் நிறுவனங்களிட மிருந்தும் நிதியுதவி வேண்டப்பட்டுள்ளது.

THIRU G. SWAMINATHAN : Sir, I remember a report was submitted by the former Commissioners of the Corporation of Madras, Thiru K. J. M. Shetty and Thiru C. Badrinath, and that report was sent to the Government. I want to know whether that report will be placed on the table of the Legislature so that there may be a discussion. Again, there was a proposal that there should be a Development Authority constituted including the M.L.As and M.L.Cs. May I know whether such a Development Authority, as it is constituted in New Delhi, will also be created in Madras City for the purpose of development of Madras ?